## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6
## பத்தாம் வகுப்பு – பொதுத்தேர்வு – மே 2022
## மொழிப்பாடம் – தமிழ் – விடைக்குறிப்பு

மொத்த மதிப்பெண்கள் – 100

**பகுதி – I** (மதிப்பெண்கள் – 15)

| உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக. | | 15 X 1 = 15 |
|---|---|---|
| 1 | (ஆ) மணிவகை | 1 |
| 2 | (ஆ) கொளல் வினா | 1 |
| 3 | (அ) காடு | 1 |
| 4 | (ஈ) சிலப்பதிகாரம் | 1 |
| 5 | (ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல் | 1 |
| 6 | (இ) தொடர் மொழி | 1 |
| 7 | (ஈ) காற்றின் பாடல் | 1 |
| 8 | (அ) புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லால் (கல்லில்) பொறிக்கப்படுபவை | 1 |
| 9 | (ஆ) வேற்றுமை உருபு | 1 |
| 10 | (ஈ) சிலப்பதிகாரம் | 1 |
| 11 | (ஈ) கால் உடை – காலால் உடைத்தல் | 1 |
| பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி. | | |
| 12 | (இ) எம் + தமிழ் + நா | 1 |
| 13 | (அ) பண்புத்தொகை | 1 |
| 14 | (ஆ) தமிழ் மொழியை | 1 |
| 15 | (இ) வேற்றுமொழியினர் | 1 |

**பகுதி – II** (மதிப்பெண்கள் – 18)

**பிரிவு – 1** **4 X 2 = 8**

| எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்<br>21 ஆவது வினாவுக்கு கட்டாயமாக விடையளிக்கவும் | | |
|---|---|---|
| 16 | ➢ உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை | 2 |
| 17 | விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க<br>(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>➢ அ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக இலக்கிய அறிவு பெற்றவர் யார் ?<br>➢ ஆ வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராக எந்த ஆண்டு சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார் ? | 1<br>1 |
| 18 | ➢ அறம் கூறும் மன்றங்கள்.<br>➢ அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன. | 1<br>1 |
| 19 | ➢ சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி. | 2 |
| 20 | ➢ நாற்று, கன்று, குருத்து, பிள்ளை குட்டி, மடலி/வடலி, பைங்கூழ்<br>(நான்கு எழுதியிருப்பின் முழு மதிப்பெண் அளிக்கவும்) | 2 |
| 21 | முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை<br>இன்மை புகுத்தி விடும். | 2 |

| பிரிவு – 2<br>எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் **5 X 2 = 10** | | |
|---|---|---|
| 22 | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>➢ (அ) இன்சொல் – பண்புத்தொகை<br>இன்சொல் பேசுதல் எப்போதும் நன்மை பயக்கும்.<br>➢ (ஆ) எழுகதிர் – வினைத்தொகை<br>எழுகதிர் தோன்றும் அழகை வருணிக்க இயலாது. | 1<br><br>1 |
| 23 | ➢ வாழ்க = வாழ் + க<br>வாழ் பகுதி க – வியங்கோள் வினைமுற்று விகுதி | 1<br>1 |
| 24 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>➢ வீடுவரை கொண்டு வந்து விடு.<br>➢ கோடு வரைய அளவுகோலைக் கொடு. | <br>1<br>1 |
| 25 | ➢ வெண்பா – செப்பலோசை<br>➢ ஆசிரியப்பா – அகவலோசை | 1<br>1 |
| 26 | ➢ (அ) நம்பிக்கை<br>➢ (ஆ) மெய்யியலாளர் | 1 |
| குறிப்பு – செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவினா | | |
| | ➢ அ) கல் – குவியல்<br>➢ ஆ) ஆடு – மந்தை | 1<br>1 |
| 27 | ➢ செயலில் உறுதித்தன்மை உள்ளதால் கால வழுவமைதியானது | 2 |
| 28 | "தேனிலே ஊறிய செந்தமிழின் – சுவை<br>தேரும் சிலப்பதி காரமதை<br>ஊனிலே எம்முயிர் உள்ளளவும் – நிதம்<br>ஓதி யுணர்ந்தின் புறுவோமே." | 2 |

பகுதி – III

பிரிவு – 1 (மதிப்பெண்கள் – 18)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் **2 X 3 = 6**

| | | |
|---|---|---|
| 29 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>➢ வாழைக்கன்று நடுவதற்கு வாங்கினேன்.<br>➢ வயலில் நெல் நாற்று நட்டேன்.<br>➢ தென்னம்பிள்ளை வாங்கி வந்தேன். | 3 |
| 30 | உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி<br>➢ (அ) அறம் கூறும் மன்றங்கள்<br>➢ (ஆ) அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்.<br>➢ (இ) துலாக்கோல் போல நடுநிலை மிக்கதாக இருந்தது. | <br>1<br>1<br>1 |
| 31 | ➢ வறுமை நிலையிலும் பழைய புத்தகக் கடைக்குச் சென்று புத்தகங்களை வாங்கிப் படித்தார்.<br>➢ உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் கூடப் புத்தகம் வாங்கிவிட்டுப் பட்டினி கிடந்தார். | 1½<br><br>1½ |

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 2 X 3 = 6**

**34 ஆவது வினாவுக்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| 32 | ➢ இராமனது வரலாற்றைக் கூறும் நூல்.<br>➢ கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இட்ட பெயர் இராமாவதாரம்.<br>➢ ஆறு காண்டங்களைக் கொண்டது.<br>➢ பாடல்கள் சந்த நயம் மிக்கவை.<br>(எவையேனும் மூன்று எழுதியிருப்பின் முழு மதிப்பெண் அளிக்கவும்) | 3 |
| 33 | ➢ அன்னை மொழி, அழகாய் அமைந்த செந்தமிழ், பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனி.<br>➢ கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசு, பாண்டிய மன்னனின் மகள்<br>➢ திருக்குறளின் பெருமைக்கு உரியவள்.<br>➢ சங்க இலக்கியங்களாகவும் உள்ள தமிழ்.<br>➢ பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகிறேன்<br>(எவையேனும் மூன்று எழுதியிருப்பின் முழு மதிப்பெண் அளிக்கவும்) | 3 |
| 34 | அடிபிறழாமல் எழுதுக<br>**(வினாவில் அல்லது என்னும் சொல் விடுபட்டுள்ளது. ஏதேனும் ஒரு பாடல் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக.**<br>**இரு பாடல்களும் எழுதியிருப்பின் சரியான ஒரு பாடலுக்கு முழு மதிப்பெண் வழங்குக)**<br>**(அ) (நான்கு வரிகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக)**<br>அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!<br>முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!<br>கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்<br>மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!<br><br>தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!<br>இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!<br>மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!<br>முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!<br>**(அல்லது)**<br>(ஆ) நவமணி வடக்க யில்போல்<br>நல்லறப் படலைப் பூட்டும்<br>தவமணி மார்பன் சொன்ன<br>தன்னிசைக்கு இசைகள் பாடத்<br>துவமணி மரங்கள் தோறும்<br>துணர்அணிச் சுனைகள் தோறும்<br>உவமணி கானம்கொல் என்று<br>ஒலித்து அழுவ போன்றே. | 3 |

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் **2 X 3 = 6**

| | | |
|---|---|---|
| 35 | ➢ மல்லிகைப்பூ–இருபெயரொட்டுப் பண்புத்தொகை(மல்லிகை –சிறப்புப்பெயர், பூ–பொதுப்பெயர்)<br>➢ தண்ணீர்த்தொட்டி – இரண் ாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை (தண்ணீரை உடைய தொட்டி)<br>➢ ஆடு மாடுகளுக்கு –உம்மைத் தொகை (ஆடுகளுக்கும் மாடுகளுக்கும்)<br>➢ குடிநீர் – வினைத் தொகை (குடித்த நீர், குடிக்கின்ற நீர், குடிக்கும் நீர்)<br>➢ சுவர்க்கடிகாரம்– ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை (சுவரின் கண் உள்ள கடிகாரம்)<br>➢ மணி பார்த்தாள் – இரண்டாம் வேற்றுமைத் தொகை (மணியைப் பார்த்தாள்)<br>(மூன்று எழுதியிருப்பின் முழு மதிப்பெண் அளிக்கவும்) | 3 |
| 36 | ➢ தீவகம் என்னும் சொல்லுக்கு ‘விளக்கு’ என்பது பொருள்.<br>➢ ஒரு இடத்தில் வைக்கப்பட்ட விளக்கு பல இடங்களுக்கும் வெளிச்சம் தருவது போல் செய்யுளில் ஓர் இடத்தில் நின்ற சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருள் தருவது தீவக அணி.<br>➢ வகைகள்: முதல்நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம். | 1<br>1<br>1 |
| 37 | அலகிட்டு வாய்பாடு (table below) | 3 |

அலகிட்டு வாய்பாடு

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கரு/வியும் | நிரை,நிரை | கருவிளம் |
| கா/லமும் | நேர்,நிரை | கூவிளம் |
| செய்/கை/யும் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| செய்/யும் | நேர், நேர் | தேமா |
| அரு/வினை/யும் | நிரை,நிரை, நேர் | கருவிளங்காய் |
| மாண்/ட | நேர், நேர் | தேமா |
| தமைச்/சு | நிரைபு | பிறப்பு |
| இக்குறட்பா ‘பிறப்பு’ என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது. | | |

பகுதி – V (மதிப்பெண்கள் – 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 5 X 5 = 25

| | | |
|---|---|---|
| 38 (அ) | <u>கருணையனின் உவமை, உருவக கவிதாஞ்சலி</u><br>❖ கருணையன் தன் தாயை இழந்து தவிப்பதை உவமைகளாலும் உருவக மலர்களாலும் வீரமாமுனிவர் உணர்ச்சி பொங்க விவரிக்கின்றார்.<br>❖ மலர் போன்ற கைகளைக் குவித்து, ‘‘பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக’’ என்று கூறி, குழியினுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பினான்.<br>❖ இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே தூய மணி போன்ற தூவும் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்து விட்டதைப் போல வாடுகின்றேன்<br>❖ என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல வாடுகிறது. துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகின்றேன். | 1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| | ❖ சரிந்த வழுக்கு நிலத்திலே, தனியே விடப்பட்டு, செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன்.<br>**(பொருத்தமான ஐந்து உவமை உருவகங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக)** | 1 |
| | **(அல்லது)** | |
| (ஆ) | **(பொருத்தமான கருத்துகள் ஐந்திற்கு முழு மதிப்பெண் வழங்குக)**<br><u>காலக்கணிதம் – கண்ணதாசன் கருத்துகளில் பிடித்தவை</u><br>➢ சரி என்றால் இயம்புவதும், தவறாயின் எதிர்ப்பதும் என் வேலை<br>➢ ஆக்கல், அளித்தல், அழித்தல் இம்மூன்றும் கடவுளும் நானும் மட்டுமே அறிந்தவை<br>➢ புகழ்ந்தால் என் உடல் சிலிர்க்காது. இகழ்ந்தால் என் உள்ளம் இறந்து விடாது<br>➢ மாற்றம் என்பது மனித இனத்தின் தத்துவம்<br>➢ என் கருத்தை ஏற்போர் ஏற்கலாம் ஏற்காதவர்கள் என்னை விமர்சிக்கலாம்.<br>➢ நானே தொடக்கமும் முடிவுமாய் இருக்கிறேன்.<br>➢ நான் கூறுவதுதான் நாட்டின் சட்டம். | 5 |
| 39<br>(அ) | <u>தாத்தா, பாட்டிக்கு கடிதம்</u><br>➢ இடம், நாள் (வலப்புறம்)<br>➢ விளித்தொடர்<br>➢ கடிதச் செய்தி<br>➢ முடிவு, ஒப்பம்<br>➢ உறை மேல் முகவரி | <br>½<br>½<br>2<br>1<br>1 |
| | (அல்லது) | |
| (ஆ) | <u>தெரு மின்விளக்கு – புகார்க் கடிதம்</u><br>➢ அனுப்புநர்<br>➢ பெறுநர்<br>➢ விளித்தொடர்<br>➢ பொருள்<br>➢ கடிதச் செய்தி<br>➢ முடிவு, ஒப்பம்<br>➢ இடம், நாள்<br>➢ உறை மேல் முகவரி | <br>½<br>½<br>½<br>½<br>1½<br>½<br>½<br>½ |
| 40 | <u>படம் உணர்த்தும் ஐந்து கருத்துகள்</u><br>(பொருத்தமான ஐந்து தொடர்களுக்கு முழு மதிப்பெண் வழங்குக) | 5 |
| 41 | <u>மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பம்</u><br>வினாத்தாளில் வழங்கப்பட்டுள்ள விபரங்களுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு முழு மதிப்பெண் வழங்குக | 5 |
| 42<br>அ) | <u>இன்சொல் பேசுவதால் விளையும் நன்மைகள்</u><br>• பிறர் மனம் மகிழும்<br>• அறம் வளரும்<br>• புகழ் பெருகும்<br>• நல்ல நண்பர்கள் சேருவர்<br>• அன்பு நிறையும்<br>(பொருத்தமான ஐந்து கருத்துகளுக்கு முழு மதிப்பெண் வழங்குக) | <br>1<br>1<br>1<br>1<br>1 |
| | **(அல்லது)** | |

| | | |
|---|---|---|
| (ஆ) | <u>மொழிபெயர்ப்பு</u><br>➢ தங்கக் கதிர்களைக் கொண்ட கதிரவன் காலையில் உதிக்கின்றது.<br>➢ தன் பொன்னிறக் கதிர்களால் இருளை விரட்டுகிறது. வெண்ணிற மேகமானது அங்குமிங்கும் நகர்கிறது<br>➢ வண்ண நிறமான பறவைகள் காலையில் தன் இசைகீதத்தை இசைக்கின்றன<br>➢ சுறுசுறுப்பான வண்ணத்துப் பூச்சிகள் மலர்களைச் சுற்றி நடனமாடுகின்றன.<br>➢ மலர்களின் நறுமணம் காற்றை எங்கும் வீசி இதமான சூழலைத் தருகிறது. | 1<br>1<br>1<br>1<br>1 |
| குறிப்பு – செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவினா | | |
| | (i) மனிதன் தனியானவன் அல்லன். சமூகக் கடலின் ஒரு துளி.<br>(ii) எல்லாரோடும் எல்லாவற்றோடும் தன்னை இணைத்துக் கொள்ளும் போது<br>(iii) பொது விதியான அறத்தை ஏற்க வேண்டும்.<br>(iv) சங்க காலத்திற்கு பிந்தைய அற இலக்கியங்களின் காலம்.<br>(v) இயல்பானவை. | 1<br>1<br>1<br>1<br>1 |

**பகுதி – V** **(மதிப்பெண்கள் – 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்** **3 X 8 = 24**

| | | |
|---|---|---|
| 43<br>(அ) | <u>சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே</u><br>➢ <u>அரசியல் அறம்</u><br>நீர் நிலை பெருக்கி, நிலவளம் கண்டு. உணவுப் பெருக்கம் செய்து அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்<br>➢ <u>வணிகத்தில் அறம்</u><br>அறம் செய்வதில் வணிகம் கூடாது.<br>இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கம் கூடாது.<br>➢ <u>போர் அறம்</u><br>வீரமற்றோர், சிறார், முதியவர், புறமுதுகிட்டோர் போன்றோரை எதிர்த்து போர் செய்யாமல் இருத்தல்.<br>➢ <u>உதவி செய்வதில் அறம்</u><br>தன்னைத் தாண்டி பிறரைப் பற்றிச் சிந்திக்கும் நிலை.<br>➢ <u>வாய்மை அறம்</u><br>பிழையா நன்மொழி<br>பொய்யாச் செந்நா<br>நிலம் பெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது. | 2<br>2<br>1<br>1<br>2 |
| (அல்லது) | | |
| (ஆ) | <u>தமிழின் சொல்வளம், புதிய சொல்லாக்கத்திற்கான தேவைகள் பற்றி தமிழ் மன்றத்தில் பேச உரைக்குறிப்புகள்</u><br>• தமிழின் சிறப்புகள்<br>• தமிழின் சொல் வளம்<br>• புதிய சொல்லாக்கத்திற்கான தேவைகள்<br>**(பொருத்தமான கருத்துகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக.)** | 2<br>2<br>4 |

| | | |
|---|---|---|
| 44<br>(அ) | <u>ஒருவன் இருக்கிறான் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர்</u><br>• மனிதநேயம் கொண்ட கதை மாந்தர் வீரப்பன்<br>• நண்பர் குப்புசாமி<br>• ஏழ்மையிலும் உதவும் குணம் படைத்த வீரப்பன்<br>• நண்பர் குப்புசாமிக்கு வீரப்பனின் கடிதம்<br>• மனித நேயத்தின் மறுஉருவம்<br>(கதைப்பகுதியையொட்டி உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக) | <br><br>2<br>1<br>2<br>2<br>1 |
| | **(அல்லது)** | |
| (ஆ) | <u>அன்னமய்யா</u><br>• அன்னமய்யா<br>• உபசரித்தல்<br>• தாயின் உள்ளம்<br>• பெயர்ப்பொருத்தம்<br>(கதைப்பகுதியையொட்டி உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக) | <br>2<br>2<br>2<br>2 |
| 45<br>(அ) | <u>சாலைப் பாதுகாப்பு</u><br>• முன்னுரை<br>• சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு<br>• சாலை விதிகள்<br>• ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள்<br>• விபத்துகளைத் தவிர்ப்போம்<br>• விழிப்புணர்வு தருவோம்<br>• முடிவுரை<br>(உட்தலைப்புகளின் கீழ் பொருத்தமான கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக) | <br>1<br>1<br>1<br>2<br>1<br>1<br>1 |
| | (அல்லது) | |
| (ஆ) | <u>'மக்கள் பணியே மகத்தான பணி'</u><br>• முன்னுரை<br>• தமிழகம் தந்த தவப்புதல்வர்<br>• நாட்டுப்பற்று<br>• மொழிப்பற்று<br>• பொதுவாழ்வில் தூய்மை<br>• எளிமை<br>• மக்கள் பணியே மகத்தான பணி<br>• முடிவுரை<br>(உட்தலைப்புகளின் கீழ் பொருத்தமான கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக) | <br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 |

************